
# பறவைக் காய்ச்சல் - தெரிந்து கொள்வோம்!



வெளியீடு

சுகாதார கல்விசார் தயாரிப்பு அலகு
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
யூன் 2008.

## பறவை காய்ச்சல் என்றால் என்ன?

பறவைக் காய்ச்சல் என்பது இன்புளூவென்சா என்னும் ஒரு வகை வைரசினால் ஏற்படுகின்றது. இதை "பறவைகளைத் தாக்கும் இன்புளூ வென்சா" என்றும் அழைப்பார்.

பறவைகள் குறிப்பாக கோழிகள், வாத்துக்கள் போன்ற பண்ணைப் பறவைகள் அதிக அபாயத்திற்கு உட்பட்டவையாக இருந்த போதிலும் மனிதர்களும் பறவைக் காய்ச்சலி னால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

## பறவைக் காய்ச்சல் பரவுகின்ற முறை

நாடுகளிற்கிடையில்....

1. உணவிற்காக/செல்லப்பிராணிகளின் வளர்ப்புக்காக இறக்குமதி செய்யப்படும் பறவைகள் மூலம்
2. இடம்பெயரும் பறவைகள் மூலம்
3. பறவைகளின் சட்டவிரோத கடத்துகை மூலம்
4. சர்வதேச பிரயாணிகள் மூலம்

நாட்டினுள்ளே......

பண்ணைகளில் இருந்து பண்ணைகளிற்கு

1. பறவைகளின் கழிவுகள் மூலம்
2. தொற்றடைந்த மண், புழுதி மூலம்
3. தொற்றடைந்த வளியை சுவாசிப்பதன் மூலம்
4. தொற்றடைந்த உபகரணங்கள், வாகனங்கள், உடைகள் மூலம்

## மனிதருக்கு தொற்று ஏற்படும் முறைகள்

நோய் தொற்றுக்குள்ளான பறவைகளின்

1. சுரப்புக்கள் மூலம்
2. கழிவுகள் மூலம்
3. நேரடித் தொடுகை மூலம்

## நோய்க்குரிய குணங்குறிகள்

பறவைகளில்.....

1. கொண்டை, தாடை கறுத்துக் காணப்படுதல்
2. தோலில் இரத்தப்பெருக்கு ஏற்படுதல்
3. இறகுகள் சிலிர்த்துக் காணப்படுதல்
4. அதிக மலம் வெளியேறுதல்
5. முட்டையிடும் அளவு குறைவடைதல்
6. சுவாசிப்பதில் கஷ்டம்
7. கூடிய எண்ணிக்கையில் திடீர் இறப்பு

மனிதர்களில்.......

1. காய்ச்சல்
2. தொண்டை நோ
3. வயிற்றோட்டம்
4. கண்நோய்
5. தசைகளில் வலி
6. தலையிடி
7. இருமல்
8. சோர்வு

தீவிரமெனின்.....

1. தீவிர சுவாச நோய்கள்
2. நியூமோனியா
3. உறுப்புக்களின் செயலிழப்பு

## பாதுகாப்பு நடவடிக்கைகள்

- ➢ மூடிய பண்ணைகளை அமைத்தல்
- ➢ கோழிப் பண்ணைகளை மக்கள் வாழும் இடத்திலிருந்தும், ஏனைய கால் நடைகள் வளர்க்கப்படும் இடத்தில் இருந்தும் இயன்றளவுக்கு தொலைவில் அமைத்தல் வேண்டும்.
- ➢ புதிய கோழிகளை இரண்டு வாரங்களுக்கு வேறாக வைத்திருந்து நாளாந்தம் அவதானித்து, அவை ஆரோக்கியமாக இருந்தால் மாத்திரமே ஏற்கனவே இருப்பவற்றுடன் கலத்தல் வேண்டும்.
- ➢ பண்ணைக் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுதல் – வெட்டிப்புதைத்தல்.
- ➢ வளர்ப்பு பறவைகளில் அசாதாரண குணங்குறிகள் /திடீர் இறப்பு ஏற்படின் பின்வரும் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவும்.
  - கால்நடை வைத்தியர்
  - சுகாதார வைத்திய அதிகாரி
  - பொது சுகாதார பரிசோதகர்

## மனிதர்களில் ஏற்படாமல் தவிர்க்க

- ➢ தற்சுகாதார (Personal hygiene) முறைகளைக் கடைப்பிடித்தல்.
- ➢ உயிருள்ள மற்றும் இறந்த கோழிகளை/ வளர்ப்பு பறவைகளை தேவையின்றி நேரடியாகத் தொடுவதை தவிர்க்கவும்
- ➢ சிறுபிள்ளைகளை வளர்ப்பு பறவைகளுடன் விளையாட அனுமதிக்காதீர்கள்
- ➢ பண்ணைத் தொழிலாளர்கள் கையுறை முகமூடி என்பவற்றை உபயோகித்தல்.

- ➢ வளர்ப்பு பறவைகளை உணவாக உட்கொள்ளும் பொழுது நன்கு சமைத்து உண்ணுதல்.
- ➢ நோய்க்குரிய அறிகுறிகள் ஏற்படின் வைத்தியரை அனுகி சிகிச்சை பெறுதல்.

## வளர்ப்பு பறவைகளை உணவாக உட்கொள்ளும் பொழுது...

- ➢ தற்சுகாதார முறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
  - சமைத்த, சமைக்கப்படாத இறைச்சி வகைகளை கையாளுவதற்கு முன்பும் பின்பும் சவர்க்கார நீரினால் கைகளை கழுவுதல்
  - சமைப்பதற்கு பயன் படுத்தப்படும் பாத்திரங்களை சவர்க்கார நீரினால் கழுவுதல்.
- ➢ சமைக்கப்பட்ட உணவுகள் சமைக்கப்படாத உணவுகளுடன் தொடுகையுறுதலைத் தவிர்த்தல்
- ➢ இறைச்சி வெட்டும் பலகை, கத்தி போன்ற வற்றை ஒவ்வொரு தடவையும் சவர்க்கார நீரினால் கழுவ்துல் வேண்டும்.
- ➢ முட்டைகள், இறைச்சி வகைகள் அனைத்தும் நன்கு சமைக்கப்பட்ட பின்பே உண்ணப்படல் வேண்டும்.
- ➢ முட்டைகளை உணவாக கொள்ளும்பொழுது விசேட கவனம் செலுத்தல்
  - சமைப்பதற்குமுன் முட்டையின் கோதுப் பகுதியை சவர்க்கார நீரினால் நன்கு கழுவுதல் வேண்டும்.
  - அரை அவியல் நிலையில் உள்ள முட்டைகளை உண்பதைத் தவிர்தல் வேண்டும்.

**“வருமுன் காப்பதே வரவேற்கத்தக்கது“**

## தயாரிப்பு ஆலோசனை:

Dr.R. சுரேந்திரகுமாரன்
விரிவுரையாளர்
சமுதாய மருத்துவத்துறை.
மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

திருமதி மலையரசி சிவராஜா
சிரேஷ்ட தொழிநுட்பவியலாளர்
சமுதாய மருத்துவத்துறை
மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

## தயாரிப்பு உதவி:

ஞானகலா ஞானகுரு (2004/FM/09)
4ம் வருடம்,
மருத்துவபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்.

## அனுசரணை:

மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகக்கிளை
திருநெல்வேலி